நாள்.05.08.2024

**அசல் வழக்கு எண். 26/2022**

பி.வா.சா.1- வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் 63/2. அதன் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்றால் ஆவணப்படி 75 குழி ஆனால் அதில் நான் அனுபவித்து வருவது 65 குழி. மீதமுள்ள 10 குழி தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண் 63/2 ல் ரஜேந்திரனும், சின்னகண்ணு ஆகியோர்கள் தனித்தனியாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். நான் மேற்படி புல எண்ணில் குடியிருக்கவில்லை. நான் என்ன சர்வே எண்ணில் தற்போது வசித்து வருகிறேன் என்றால் புல எண்.281/2 ஏ ல் குடியிருந்து வருகிறேன். மேற்படி புல எண்ணில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 11 வருமாக. சின்னகண்ணு மேல்புறத்திலும், ரஜேந்திரன் கீழ்புறத்திலும் குடியிருந்து வருகிறார்கள். ராஜேந்திரனுக்கு கிழக்கில் அதிராம்பட்டிம் - மன்னார்குடி ரோடு உள்ளது. மேற்படி ரோட்டிற்கும் ராஜேந்திரன் குடியிருந்து வரும் இடத்திற்கும் இடையில் வாய்க்கால் கான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாய்க்கால்கான் என்பது மழை காலத்தில் மழை நீர் செல்வதற்காக உள்ளது. அது பாசனவாய்க்கால் கிடையாது. சின்னகண்ணுக்கு மேல்புறத்தில் வெங்கடாச்சலத்திற்கு சொந்தமான தென்னந்தோப்பு உள்ளது. ரஜேந்திரன், சின்னகண்ணு ஆகியோர்களின் வீட்டிற்கு தென்புறம் என்ன உள்ளது என்றால் ஆவுடையப்பன் வீடு உள்ளது. ஆவுடையப்பன் வீட்டிற்கும், ரஜேந்திரன், சின்னகண்ணு ஆகியோர்களின் வீட்டிற்கும் இடையில் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் ஆவணத்தில் இல்லை. மேற்படி ரோட்டிற்கு யார்பெயரில் பட்டா உள்ளது என்றால் ஆவுடையப்பன் பெயரில் உள்ளது. ஆவுடையப்பன் மேற்படி ரோட்டை தடை செய்கிறாரா என்றால் இல்லை. ஆவுடையப்பன் வீட்டிற்கும், ரஜேந்திரன், சின்னகண்ணு ஆகியோர்களின் வீட்டிற்கும் இடையில் உள்ள ரோடு எத்தனை அடி அகலம் இருக்கும் என்றால் 12 அடி. மேற்படி ரோட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் 63 ல் உள்ளது ஆனால் உட்பிரிவு தெரியாது. அதிராம்பட்டிம் - மன்னார்குடி ரோட்டிலிருந்து ஆவுடையப்பன் வீட்டிற்கு வடபுறம் உள்ள ரோடு மேற்குநோக்கி செல்கிறது. அதிராம்பட்டிம் - மன்னார்குடி ரோட்டிலிருந்து ஆவுடையப்பன் வீட்டிற்கு வடபுறம் உள்ள ரோடு

பிரியும் இடத்தில் பாலம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி பாலம் தண்ணீர் செல்வற்காக போடப்பட்டுள்ளது. ஆவுடையப்பனுக்கு மேல் புறம் யாருக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் விஸ்வநாதன் அய்யர் இடம் உள்ளது. அந்த இடத்தை யார் வாங்கியுள்ளார் என்றால் ராமசாமி அவருடைய 2 வது மகன் பெயரில் வாங்கப்பட்டது. பெயர் தெரியாது. அதற்கும் மேற்கில் யாருடைய இடம் உள்ளது என்றால் வாதி சின்னதம்பியின் இடம் உள்ளது. அதற்கும் மேற்கில் 3 வீடுகள் உள்ளது. அதற்கும் மேற்கில் ராமசாமி சொந்தமான உடம் உள்ளது. அதற்கும்மேற்கில் முதல் வாதி சின்னதம்பியின் இடம் உள்ளது. அதற்கும் மேற்கில் 2 ம் வாதி ராமசந்திரன் இடம் உள்ளது. அதற்கும் மேற்கில் ஊராட்சி சாலை உள்ளது. அதற்கும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி PWD வாய்க்கால் வந்து ஊராட்சி சாலையை கடந்து ஊராட்சி சாலைக்கு கீழ்புறத்தில் சென்று பின்னர் வடக்கு நோக்கி சென்று மீண்டும் கீழ்புறமாக திரும்பி செல்கிறது. அந்த PWD வாய்க்கால் அதிராம்பட்டிம் - மன்னார்குடி சாலையை கடந்து செல்கிறது. PWD வாய்க்காலுக்கு எந்த பக்கத்தில் வடிகால் வாய்க்கால் செல்கிறது என்றால் தெற்கில் செல்கிறது. அந்த வடிகால் வாய்க்கால் ஊராட்சி சாலைக்கு கீழ்புறம் உள்ள PWD வாய்க்காலில் இணைகிறது. மேற்படி PWD வாய்க்கால் வழியாகதான் வடிகால் தண்ணீர் சென்று சீவாடி ஏரியில் மழைநீர் விழுகிறது. PWD வாய்க்கால் என்பது பாசன வாய்க்கால். அதிராம்பட்டிம் - மன்னார்குடி ரோட்டிற்கும், ஊராட்சி சாலைக்கும் இடையில் உள்ள ரோடு பட்டா நிலத்தில் செல்கிறது. அதன் அகலம் 12 அடி. அது ஊராட்சியால்தான் பராமரிப்பு செய்துவருகிறது. அந்த ரோடு கீழ்புறம் சிமெண்ரோடாகவும், மேல்புறம் தார் சாலையாகவும் உள்ளது. மேற்படி சிமெண்ட்ரோடு மற்றும் தார் ரோடு ஊராட்சி செலவில்தான் போடப்பட்டது. அந்த ரோட்டிற்கு தென்புறம்தான் வடிகால் கான் உள்ளது என்பதுதான் எனது கட்சி. ஊராட்சி சாலைக்கும், சின்னப்பன் வீட்டிற்கும் இடையில் உள்ள ரோட்டின் தென்புறத்தில் வடிகால் கான் உள்ளது. சின்னப்பன் வீட்டிற்கு கிழக்கில் யார் உள்ளது என்றால் மருதமுத்து. சின்னப்பன் வீட்டிற்கும் அதிராம்பட்டிம் - மன்னார்குடி ரோட்டிற்கும் இடையில் தென்புறத்தில் கான் இல்லை. ரோட்டின் வடபுறத்தில் உள்ள வடிகால் கானை நாங்கள் தூர்த்துவிட்டாக சொல்லி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வடிகால் தண்ணீர் மேற்குநோக்கி செல்வதாக நான் கட்சி செய்கிறேன், வாதி கிழக்குநோக்கி சென்று அதிராம்பட்டிம் - மன்னார்குடி ரோட்டில் மழைநீர் விழுவதாக கட்சி செய்கிறார். பொதுவாக தண்ணீர் மேற்கிலிருந்து

- கிழக்கு நோக்கியும், வடக்கிலிருந்து - தெற்குநோக்கியும் செல்லும் என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான கிழக்கே உள்ள இடத்தில் வடபுறத்தில் வாய்க்கால் கான் இல்லை. நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிட எனக்கு ஆட்சேபணை இல்லை. கிழக்கு நோக்கிதான் வடிகால் வாய்க்கால் உள்ளது என்றும் மேற்கு நோக்கி வடிகால் வாய்க்கால் இல்லை என்றால் சரியல்ல. எனது இடத்திற்கு தென்புறம் ரோட்டிற்க வடபுறம் உள்ள கானை தூத்துவிட்டு தற்போது வடிகால்வாய்க்கால் மேற்குநோக்கில்தான் உள்ளது என்றும் கிழக்கு நோக்கி செல்லவில்லை என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் புல எண்.55/7 ஏ 1, 55/1 ஏ 1, 55/5 ஏ 1, 55/4 ஏ, 55/3 ஏ மற்றும் 55/2 ஏ 1 ஆகிய புல எண்கள் யாருடைய இடம் என்றால் படித்துபார்த்தால்தான் தெரியும். மேற்படி புல எண்களுக்கு எந்த பக்கத்தில் வடிகால்கான் உள்ளது என்று சொல்கிறேன் என்றால் வடபுறத்தில் உள்ளது. தாவா சொத்தில் இருந்த வடிகால் கானை தூர்த்துவிட்டு தற்போது வடிகால் கானை இல்லை என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.